தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விலை ரூ. 15/– மலர் 19 - இதழ் 09 – ஜனவரி 2018 | Price : Rs. 15/- Vol : 19 - Issue : 09 - January 2018

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ DEPARTMENT

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் உதவி வழங்குதல்

சுய உதவிக் குழுக்களின் மகளிர் அமைத்த மாடித் தோட்டம்

ஆண்டுச் சந்தா ரூபாய் 180/-

திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்டம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்று வரும் வெற்றியானது ஒட்டுமொத்த சமுதாயத்தின் வெற்றி. கடின உழைப்புக்கு கிடைத்த வெற்றியாகும். பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக உங்களின் செயல்பாடுகள் உள்ளது. அதற்காக உங்களுக்கு எனது பாராட்டுகள்.

ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பையும், அதைத் தொடர்ந்து தமிழர்களின் பண்டிகைகளில் மிக முக்கியமான தைப் பொங்கல் திருநாளையும் அனைவரும் சேர்ந்து கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பழமொழிக்கு ஏற்ப, இந்த ஆண்டில் பல புதிய நல்ல வாய்ப்புகள் உங்களுக்கு கிடைத்திடவும், அதனைக் கொண்டு மேலும் கடினமாக உழைத்து, அனைவரும் வாழ்வில் என்றும் வளமும் பெற்றிட எனது வாழ்த்துகள்.

கடந்த ஆண்டுகளில் நாம் பெற்ற வெற்றிகள் மற்றும் கிடைத்த அனுபவங்களை மனதில் கொண்டு, எதிர் வரும் காலங்களில் இந்த வெற்றியானது தொடர நாம் திறமையுடன் பணியாற்றிட வேண்டும்.

இன்னும் சில வாரங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் ஆண்டுத் தேர்வுகள் துவங்கி விடும். உங்களின் பிள்ளைகளும் ஆண்டுத் தேர்வில் பங்கு கொள்ள தயாராக இருப்பார்கள். அவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக எவ்வித அழுத்தத்தையும் தரக் கூடாது. அவர்கள் 'மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும், ஆரோக்கியமாகவும், இயல்பாகவும் செயல்பட்டால் மட்டுமே தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும். அவர்களுக்கு சத்தான உணவுகள், படிப்பதற்கு ஏற்ற அமைதியான சூழல், உரிய ஓய்வு ஆகியவற்றை பெற்றோர்கள் உருவாக்கித் தர வேண்டும். இன்றைய மாணவர்கள் தான் நாளைய சமுதாயம்.

எனவே சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மட்டுமல்லாது அனைவரும் தங்களின் பிள்ளைகளை சிறப்பானவர்களாக உருவாக்க அவர்களுக்கு போதிய வாய்ப்புகளையும், வசதிகளையும் வழங்க வேண்டும். பெற்றோர்களான உங்களுடைய இத்தகைய சிறந்த செயல்பாடுகள்தான், குழந்தைகளுக்கு சிறந்த எதிர் காலத்தை உருவாக்கித் தரும்.

அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

மரவள்ளிக் கிழங்கு வடை 14

மண்டல அளவிலான சாராஸ் விற்பனைக் கண்காட்சி 06

மகளிர் சுய உதவிக் குழுவினர் அமைத்துள்ள மாடித் தோட்டம் 10

மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் 24

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் 15

கடற்பாசி சேகரிக்கும் மீனவ மகளிருக்கான கடன் மீட்புத் திட்டம் 34

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 29

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

முற்றம் இதழில் வெளியாகும் கட்டுரைகள், உடல் நலக் குறிப்புகள், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள், சுய உதவிக் குழுவினருக்கு அளிக்கப்படும் பல்வேறு பயிற்சிகள் குறித்த விபரங்கள் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ஊக்கத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தி வருகின்றன.

ஆர். வளர்மதி (ஊக்குனர்),
குறிஞ்சி மலர் மகளிர் சுய உதவிக் குழு,
கலியகவுண்டனூர், சேலம் மாவட்டம்

திறந்த வெளியில் மலம் கழித்தலில் ஏற்படும் தீமைகள் குறித்தும், தனி நபர் இல்லக் கழிப்பறைகளின் அவசியம் குறித்தும் ‘முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்’ திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து முற்றம் இதழில் வெளியிடப்படும் செய்திகள் சிறப்பாக இருக்கின்றன.

மனோகரச் செல்வி (செயலாளர்),
மாவட்ட மகமை, புதுவாழ்வு திட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.

கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்கள் தங்கள் வாழ்வில் வளம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் பல்வேறு நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த செய்திகளும், பொதுக்கட்டுரைகளும் மிகவும் நன்றாக இருக்கிறது.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
செந்தமிழ் மகளிர் குழு,
சருத்துப்பட்டி, தேனி மாவட்டம்.

கடலோர மக்களின் வாழ்வில் பெருத்த சேதத்தை ஏற்படுத்திய சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி வரும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளையும், இத்திட்டத்தால் பலன் அடைந்த மக்களின் வெற்றிக் கதைகள் சிறப்புடன் முற்றம் வெளியிட்டு வருகிறது. அதற்கு எங்களின் வாழ்த்துகள்.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
சரஸ்வதி மகளிர் சுய உதவிக் குழு,
முட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 19 – இதழ் 09 – ஜனவரி 2018
விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்
திரு. **பிரவீன் பி நாயர்,** இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
எஸ். அமிர்த ஜோதி, இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
எஸ். ஜானகி,
டி.ஆர்.ஓ. / பொது மேலாளர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி
கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

எஸ். அண்ணாமலை பிரேம்குமார்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பொறுப்பாசிரியர்
சு, மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

யாருக்கு வெற்றி...?

அன்புள்ள வாசகர்களுக்கு,

பருவ மழை முடிந்து இலையுதிர் காலம் தொடங்கி விட்டது. கடந்த வடகிழக்கு பருவ மழை ஒரு பகுதியில் புயல் மற்றும் வெள்ளமாக உருவெடுத்து பேரழிவை ஏற்படுத்தியது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலுக்குள் சென்ற மீனவர்கள் பெரும் ஆபத்தை சந்திக்க நேர்ந்தது. மீனவர்களின் வாழ்வாதார மான கட்டு மரங்கள், மீன்பிடி படகுகள், வலைகள் ஆகியவைகள் பெரு வாரியாக அழிந்து போயின. அனைத்திற்கும் மேலாக பல மனித உயிர்கள் பறிக்கப்பட்டது. இதுபோன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்படும் காலங்களில் அரசு மற்றும் ஊடகங்கள் அறிவிக்கும் முன் எச்சரிக்கையை கவனத்தில் எடுத்துக் கொண்டு, அதற்கேற்றவாறு செயல்பட அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு பருவ மழை சீராக பெய்தாலும் பல இடங்களில் வறட்சி காணப்படுகிறது. கோடைக் காலங்களில் குடிநீருக்கு பஞ்சம் ஏற்படுமோ என்ற பயமும் உருவாகி உள்ளது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை வழக்கத்தை விட ஒன்பது சதவிகிதம் குறைவாகவே பெய்துள்ளது. பருவ மழையால் கிடைத்த தண்ணீர் பெருமளவு கடலில் கலந்து விட்டது. தண்ணீரை மறுசுழற்சி செய்வதற்கும், நீர் மேலாண்மையை அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் வந்து விட்டது. தவறினால் தண்ணீரைக் கூட இறக்குமதி செய்ய நேரிடும் காலம் வந்துவிடும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறி வருவது உண்மையாகிவிடும்.

குளிர்பானங்கள், மதுபானங்கள், மினரல் வாட்டர் ஆகியவைகளை தயார் செய்யும் தொழிற்சாலைகள் நிலத்தடி நீரை உறிஞ்சாமல், கடல் நீரைப் பயன்படுத்தி இந்த பானங்களை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தை கையாளக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மனிதன் இயற்கையோடு போராடும் காலம் தொடங்கி விட்டது. இப்போராட்டத்தில் இயற்கை வெற்றி பெற்றால் மனித குலத்தை பல கோடி ஆண்டுகள் வாழ வைக்கும். ஆனால், மனிதன் இயற்கையை அழித்தால் மனித குலமே அழிந்துவிடும். எனவே, இயற்கையோடு இணைந்து வாழ கற்றுக் கொள்வோம். ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

முன்னாள் முதலமைச்சர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா திண்டுக்கல் மாவட்டத்தில் 31.12.2017 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திண்டுக்கல் அங்கு விலாஸ் மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழக சட்டமன்ற சபாநாயகர் திரு. தனபால் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு பாராளுமன்ற துணை சபாநாயகர் திரு. தம்பித்துரை அவர்கள், மாண்புமிகு வளத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்கள் மற்றும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள், ரூ. 681 கோடி மதிப்பிலான 11 கட்டிடங்களைத் திறந்து வைத்து, ரூ. 187 கோடி மதிப்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். பிறகு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ – மாணவிகளுக்கு பரிசுகளையும் வழங்கி, விழாப் பேருரையாற்றினார்.

இந்நிகழ்வின் போது, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள், திண்டுக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலர்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். ■

திருச்சியில் இந்தியா தேசிய அளவிலான சுய உதவிக் குழுக்களின் பொருட்கள் விற்பனைக் கண்காட்சி (சாராஸ்)

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், தேசிய அளவிலான சாராஸ் விற்பனைக் கண்காட்சி, 27.12.2017 முதல் 07.01.2018 வரை திருச்சிராப்பள்ளி நகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டத்திலுள்ள தென்னூர், உழவர் சந்தை மைதானத்தில் நடைபெற்றது.

இக்கண்காட்சியினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன் அவர்கள் துவக்கி வைத்து விழா பேருரையாற்றினார். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. எஸ். வளர்மதி அவர்கள் விழா சிறப்புரையாற்றினார். நாடாளுமன்ற மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. பி. பாபு அவர்கள் வரவேற்புரையும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. கோ. மலர்விழி அவர்கள் வாழ்த்துரையும் வழங்கினார்கள்.

மேற்படி தேசிய அளவிலான சாராஸ் கண்காட்சியில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பிற மாநிலங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த குந்தன் நகைகள், செயற்கை ஆபரணங்கள், தேன் வகைகள், சணல் பொருட்கள், இயற்கை மூலிகைப் பொருட்கள், பாரம்பரிய உணவு வகைகள், தஞ்சாவூர் கைவினைப் பொருட்கள், கைத்தறி ஆடைகள், கடல் சிப்பிகள் மற்றும் சங்கினால் செய்த பொருட்கள், மட்பாண்டங்கள், மர பொம்மைகள் மற்றும் பிற மாநிலங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்த பல்வேறு பொருட்களும் விற்பனை செய்யப்பட்டன. கண்காட்சிக்கு வருகை தந்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை வாங்குபவர்களுக்கு தினசரி குலுக்கல் முறையில் பட்டுப் புடவைகளும் பரிசாக வழங்கப்பட்டன. ■

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

தமிழகம் முழுவதும் மாவட்டந்தோறும் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன்படி நீலகிரி மாவட்டம் ஊட்டியில் 30.12.2017 அன்று புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழக சட்டமன்ற சபாநாயகர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு பாராளு மன்ற துணை சபாநாயகர் திரு. தம்பித்துரை அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள், புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் உருவச் சிலையினை திறந்து வைத்தார், பின்னர் அங்கு அமைக்கப் பட்டிருந்த பாரத ரத்னா டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாக் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து ரூ. 57.86 கோடி செலவில் 258 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ரூ. 272.36 கோடியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். பிறகு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் காக்குச்சி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ரூ. 40 இலட்சத்திற்கான காசோலையும், பல்வேறு பயனாளிகளுக்கு ரூ. 81.04 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ – மாணவிகளுக்கு பரிசுகளையும் வழங்கி, விழாப் பேருரையாற்றினார். விழாவின் நிறைவாக நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை நல்கினார்.

இந்நிகழ்வின் போது, நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். ■

வட்டார அளவிலான வங்கி நிதியியல் கல்வி மற்றும் வங்கி சேவை தொடர்பான பயிற்சி

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ஊராட்சி ஒன்றியம் வாரியாக வங்கியாளர்கள், சமூக வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் Active PLF பொறுப்பாளர்களுக்கு வட்டார அளவிலான வங்கி நிதியியல் கல்வி மற்றும் வங்கி சேவை (Block level Oriendation Programe on Financial Incluson and Financial Literacy) தொடர்பான பயிற்சி 08.12.2017 அன்று முதல் கட்டமாக வங்கி மேலாளர்கள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் Active PLF பொறுப்பாளர்களுக்கு புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியினை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு. சு. கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ச. சரோஜாதேவி அவர்கள் பயிற்சி தொடர்பாக விளக்க உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் (IOB), உதவிப் பொது மேலாளர், நபார்டு வங்கி மற்றும் மாவட்ட அளவிலான அனைத்து வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் திருமயம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் 15.12.2017 அன்று நடைபெற்றது.

இம்முகாமில் வேலை வேண்டி கலந்து கொண்ட 257 இளைஞர்களில் 72 நபர்கள் தனியார் நிறுவனங்களில் பணி வாய்ப்பிற்கு தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு பணி நியமன ஆணைகளை புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ச. சரோஜாதேவி அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர்கள் திருமதி. வி. அமுதா, திரு. ஐ. ஜான்லிங்டன், திரு. வி. சிவசுப்பிரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

விற்பனைக் கண்காட்சி

சிவகங்கை மாவட்டத்தில் மகளிர் திட்டம் சார்பாக மாநில அளவிலான திட்டமிட்ட கண்காட்சி 05.12.2017 முதல் 16.12.2017 வரை காரைக்குடி கண்ணதாசன் மணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியினை சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்தக் கண்காட்சியில் மாநில அளவில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 31 சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திருந்தனர். இந்தக் கண்காட்சியின் துவக்க விழாவில் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மகளிர் திட்ட பணிகள் குறித்த கள ஆய்வு

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. க. லதா, இ.ஆ.ப., அவர்கள் 14.12.2017 அன்று சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் காளையார் கோவில் ஒன்றியத்திற்குட்பட்ட பருத்திக் கண்மாய் ஊராட்சியில் செயல்படும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஒத்தத் தொழில் குழு ஆகியவற்றைப் பார்வையிட்டு அவைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மேற்படி அமைப்புகளின் உறுப்பினர்களிடம் கலந்தாய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், அப்பகுதியில் செயல்படும் 16 சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார்.

அதைத் தொடர்ந்து கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதி வரப் பெற்றதில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில் புதிய குழுக்களுக்கு ஆதார நிதியாக தலா ரூ. 15,000/– வழங்கப்பட்டுள்ளதாக குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். மேலும் தனி நபர் கடனாக மூன்று மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்று நலிவுற்றோருக்கு தலா ரூ. 10,000/– வீதம் வழங்கப்பட்டு, அவர்கள் தொழில் மேற்கொண்டு வருகின்ற விபரங்களையும் தெரிவித்தனர். மேலும் அப்பகுதியில் மாடு வளர்ப்பு குறித்த விபரங்களையும், அதற்கான தீவனங்கள் வளர்ப்பது குறித்தும், பாலிலிருந்து மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் அதற்கான பயிற்சி ஏற்பாடுகள் குறித்தும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள், ஆண்டுரணி குக்கிராமத்தில் செயல்பட்டு வரும் ஆடு வளர்ப்பு ஒத்தத் தொழில் குழுவை பார்வையிட்டு, ஒத்தத் தொழில் குழுவின் உறுப்பினர்களிடம் கலந்துரையாடினார். ஆடு மற்றும் மாடு வளர்ப்பு வளர்ப்பின் மூலம் மதிப்புக் கூட்டு பொருட்களை தயாரித்தல் குறித்த பயிற்சி மற்றும் அதற்கான சந்தைப்படுத்துதல், அனைத்துத் துறை ஒருங்கிணைப்பு மூலம் தீவன வளர்ப்பிற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடனிருந்தனர். ■

பெண்கள் இதய நல தினம் (பிப்ரவரி 1)

இதய நோய் குறித்து பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே பெண்கள் இதய நல தினத்தின் முக்கிய நோக்கமாகும். இதய நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்ட பிறகு இந்த எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது என்பது மகிழ்ச்சியான செய்தியாக இருக்கிறது. மார்பகப் புற்று நோயைவிட இதய நோய் பல மடங்கு அதிகமாகப் பெண்களைப் பாதித்து வருகிறது.

இதய நல தினத்தில் இதய நோய் பற்றிய அறிவியல்பூர்வமான தகவல்கள் மற்றும் இதய நோய் பாதிப்பு வராமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி பெண்களுக்கு எடுத்து கூறப்படுகிறது.

நீரிழிவு நோய், உடல் பருமன் போன்றவற்றை கட்டுப்படுத்தினால் இதய நோய் குறைய வாய்ப்புள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. ■

மகளிர் சுய உதவிக் குழுவினர் அமைத்துள்ள மாடித் தோட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தின் மூலம் மாடித் தோட்டம் அமைத்தல் மற்றும் அதற்கான பயிற்றுனர்களைத் உருவாக்க தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 120 பெண்களை தேர்வு செய்து, நமது தலைமையகம் செயல்படும் சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 26.11.2017 முதல் 11.12.2017 வரை 15 நாட்கள் மாடித் தோட்டம் அமைக்கும் பயிற்சி உரிய பயிற்சியாளரைக் கொண்டு வழங்கப்பட்டது.

இப்பயிற்சியில் மாடித் தோட்டம் அமைக்கும் முறை, இயற்கை உரங்கள் பயன்பாடு, தரமான விதைகள் தேர்வு, மாடித் தோட்டம் அமைக்கத் தேவையான பொருட்கள் கொள்முதல், பல்வேறு வகையான காய்கள், கீரைகள், பழங்கள் போன்றவற்றை வளர்க்கும் முறைகள் உட்பட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மாடித் தோட்டம் அமைக்கப்பட்டு, இயற்கையான முறையில் பயிர் செய்யப்பட்ட கீரை வகைகள், காய்கறிகள் மற்றும் மூலிகைச் செடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த மாடித் தோட்டத்தை 27.12.2017 அன்று திட்டக்குழுவின் துணைத்தலைவர் திருமதி. சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., (பணி நிறைவு) அவர்களும், திருமதி. நிர்மலா, இ.ஆ.ப., (பணி நிறைவு) அவர்களும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்களும் பார்வையிட்டு, இதனை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்திட ஆலோசனைகள் வழங்கியதுடன், தங்களின் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

இம்மாடித் தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள கீரை வகைகளில் அறுவடைக்குத் தயாரான கீரை வகைகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமையகத் தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் வாங்கிக் கொள்ளவும், அருகில் உள்ள குடியிருப்புகளில் வசிப்பவர்கள் பார்வையிட்டு பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

29.12.2017 அன்று கீரை வகைகளின் முதல் அறுவடை மற்றும் விற்பனையினை மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள் துவக்கி வைத்தார். அறுவடை செய்யப்பட்ட கீரை வகைகள் அலுவலர்களுக்கும், அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் எதிரில் அமைந்துள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் (Jain Apartment) வசிப்பவர்களும் விற்பனை செய்யப்பட்டன.

05.01.2018 அன்று அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற RSETI கூட்டத்தில் கலந்து கொண்ட கூடுதல் தலைமைச் செயலர் / ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், SLBC பிரதிநிதிகள், கூடுதல் இயக்குநர்கள், மற்றும் அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்கள் ஆகியோர் மாடித் தோட்டத்தினைப் பார்வையிட்டு, அங்கு விளைந்துள்ள கீரை வகைகள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தனர். அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்களும் தங்கள் மாவட்டத்தில் மாடித் தோட்டம் அமைப்பது குறித்து ஆர்வத்துடன் தெரிந்து கொண்டனர்.

மாடித் தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சியில் மாடித் தோட்டம் அமைப்பது மற்றும் திட திரவ வள மேலாண்மை குறித்து தெரிந்து கொண்ட பயிற்றுநர்களுக்கு, இயற்கை உரங்களான பஞ்சகவ்யம், அமிர்தபாணி கரைசல், இயற்கை பூச்சி விரட்டிகள் போன்றவற்றைத் தயார் செய்வது குறித்து தெரிந்து கொள்வதற்கான பயிற்சி 07.01.2017 முதல் 09.01.2017 வரை மூன்று நாட்கள் வழங்கப்பட்டது.

பயிற்சியின் நிறைவு நாளான 09.01.2018 அன்று கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள் பயிற்றுநர்கள் அவரவர் மாவட்டங்களில் மாடித் தோட்டம் அமைப்பதை செயல்படுத்துவது குறித்து ஆலோசனைகளை வழங்கியதுடன், ஒரு மாத காலத்திற்குள் தங்கள் மாவட்டங்களில் அரசு (அ) தனியார் கட்டிடங்களில் மாதிரித் தோட்டம் (குறைந்த பட்சம் 100 கூடைகளுடன்) அமைக்கும், 25 பணி ஆணைகளை பெறும் மாவட்டத்திற்கு பரிசு வழங்கப்படும் என்றும் அறிவித்தார். ■

அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் சுய உதவிக் குழுக்களின் மகளிரால் அமைக்கப்பட்டுள்ள மாடித் தோட்டம்

05.01.2018 அன்று அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற RSETI கூட்டத்தில் கலந்து கொண்ட கூடுதல் தலைமைச் செயலர் / ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், SLBC பிரதிநிதிகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், மற்றும் அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்கள் ஆகியோர் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள மாடித் தோட்டத்தினைப் பார்வையிட்டு, மாடித் தோட்டம் அமைப்பது குறித்த விபரங்களைக் கேட்டறிந்தனர்.

மக்கள் குறைதீர்க்கும் முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டாரம், சித்துராஜகண்டிகை கிராமத்தில் 20.12.2017 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு, அரசு நலத் திட்ட செயல்பாடுகள் குறித்து தெரிந்து கொண்டு, பல்வேறு திட்டங்களின் பயனைப் பெற்றனர்.

மேலும் இம்முகாமில் மகளிர் விவசாயிகளால் பயிரிடப்பட்ட மாடி தோட்ட காய்கறிகள் மற்றும் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பூச்சி விரட்டிகளான பஞ்சகாவ்யம், மோர் கரைசல், அக்னி அஸ்திரம், நீமாஸ்திரம், ஐந்திலை கரைசல், இஞ்சிப் பூண்டு கரைசல், கோமியக் கரைசல், ஜீவாமிர்தம் போன்ற இயற்கை விவசாய ஊட்டச் சத்துக்கள் தயார் செய்து விற்பனை செய்தனர். இதன் மூலம் விவசாயிகள் இயற்கை விவசாயத்தை பின்பற்றுவதால் கிடைக்கும் நன்மைகள், குறைந்த விலையில் இயற்கை உரம் தயார் செய்து பயன்படுத்துவது போன்றவை குறித்து தெரிந்து கொண்டனர்.

இம்முகாமில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. ஏ. சுந்தரவள்ளி, இ.ஆ.ப., அவர்கள், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. கிருஷ்ணம்மாள் அவர்கள், பொன்னேரி வட்டாட்சியர் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் நிர்வாகிகளுக்கு பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், திருவள்ளூர் மாவட்டம், இரா. கி. பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான புத்தகப் பராமரிப்புப் பயிற்சி 22.12.2017 மற்றும் 23.12.2017 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் பதிவேடுகள் பராமரிப்பின் அவசியம், செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான பணிகள் மற்றும் பொறுப்புகள் குறித்து உதவித் திட்ட அலுவலரால் விளக்கிக் கூறப்பட்டது. மேலும் பயிற்சியின் போது ஊராட்சி வாரியாக அனைத்து பதிவேடுகளும் ஆய்வு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டது. ■

திறந்தவெளியில் மலம் கழித்தலின் பாதிப்பு குறித்து விழிப்புணர்வு கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், திருவள்ளூர் மாவட்டம், இரா. கி. பேட்டை மற்றும் சோழவரம் ஆகிய வட்டாரங்களில் உள்ள சுகாதார ஊக்குவிப்பாளர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களுக்கு தனிநபர் இல்லக் கழிவறை கட்டுதல் மற்றும் பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு கூட்டம் 21.12.2017 அன்று இரா.கி.பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், 27.12.2017 அன்று சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. கிருஷ்ணம்மாள் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு கழிவறை பயன்படுத்துதலின் அவசியம் மற்றும் நன்மைகள் குறித்தும், திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் விளக்கிக் கூறினர். ■

தமிழ்நாடு மாநில சுகாதார சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பு (TN-SANFED) துவக்க விழா

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் சுகாதார சானிடரி நாப்கின்களை சந்தைப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு மாநில அளவில் சுகாதார நாப்கின் உற்பத்தியில் ஈடுபடும் மகளிர் குழுக்களை ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில சுகாதார சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பின் (TN-SANFED) துவக்க விழா 27.12.2017 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் அருகில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது. திருமதி. சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., (பணி நிறைவு) அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கு பதிவு சான்று வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

கூடுதல் தலைமைச் செயலர் / ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையினால் சானிடரி நாப்கின் கொள்முதல் செய்வதற்கான அரசாணையை கூட்டமைப்பிற்கு வழங்கினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திரு. உமாநாத், இ.ஆ.ப., அவர்கள் (தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம்), திருமதி. நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள் (பணி நிறைவு), டாக்டர் திரு. குழந்தைசாமி அவர்கள் (இயக்குநர், பொது சுகாதாரம், நோய் தடுப்புத் துறை), திருமதி. எஸ். அமிர்தஜோதி, இ.ஆ.ப., அவர்கள் (செயல் இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்) ஆகியோர் கலந்து கொண்டு

வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள் கூட்டமைப்பு தொடர்பாக கருத்துரை வழங்கினார்கள். சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பின் தலைவி திருமதி. எஸ். மகேஷ்வரி அவர்கள் கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்து விவரித்தார்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் திருமதி. சுஜாதா அவர்கள், ஊடகத் துறையைச் சேர்ந்த திரு. கணபதி அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக கூட்டமைப்பின் செயலாளர் திருமதி. கன்னிகா பரமேஸ்வரி நன்றியுரை நல்கிட விழா இனிதே நிறைவுற்றது. இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சந்தைப் பிரிவினர் செய்திருந்தனர். ■

மரவள்ளிக் கிழங்கு வடை

தேவையான பொருட்கள்

மரவள்ளிக் கிழங்கு – 1/4 கிலோ, பட்டாணிப் பருப்பு – 100 கிராம், பெரிய வெங்காயம் – 4, பச்சை மிளகாய் – 2, சோம்பு – ஒரு டேபிள் ஸ்பூன், சோடா உப்பு – ஒரு சிட்டிகை, கொத்தமல்லி, கறிவேப்பிலை, உப்பு – தேவைக்கேற்ப, வடை சுடுவதற்கான எண்ணை தேவையான அளவு.

செய்முறை

மரவள்ளிக் கிழங்கை சுத்தம் செய்து தேங்காய்ப் பூ போல துருவிக் கொள்ளவும். பட்டாணிப் பருப்பை 1/2 மணி நேரம் ஊற வைத்து, கொர கொரவென்று அரைத்து வைத்துக் கொள்ளவும். பெரிய வெங்காயம், கொத்தமல்லி, கறிவேப்பிலை ஆகியவற்றை பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். சோம்பை தூளாக்கிக் கொள்ளவும்.

பின்னர் மரவள்ளிக் கிழங்கு துருவல், அரைத்து வைத்துள்ள பருப்பு மற்றும் நறுக்கி வைத்துள்ள பெரிய வெங்காயம், கொத்தமல்லி, கறிவேப்பிலை ஆகியவற்றுடன் சோம்புத் தூள், உப்பு, சோடா மாவு ஆகியவற்றை சேர்த்து நன்றாக பிசைந்து வைத்துக் கொள்ளவும்.

வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணையை ஊற்றி சூடுபடுத்தவும். எண்ணை காய்ந்தவுடன், பிசைந்து வைத்துள்ள மாவை வடை போல் தட்டிப் பொன்னிறமாக பொறித்து எடுக்க வேண்டும். இந்த மரவள்ளிக் கிழங்கு வடை சுவையும், சத்தும் நிறைந்தது. ■

ஆர். வெண்ணிலா,
மலர்கள் மகளிர் சுய உதவிக் குழு,
செல்லப்பன்பட்டி, நாமக்கல்.

பயனுள்ள குறிப்புகள்

1. முட்டை ஆம்லேட் போடும்போது சிறிது கடலை மாவு கலந்து ஆம்லேட் போட்டால் மிருதுவாக இருக்கும்.
2. முட்டையை வேக வைக்கும் போது முட்டை உடைந்து வெளியில் வராமல் இருக்க சிறிது சர்க்கரை சேர்த்தால் முட்டை உடையாமல் முழுமையாக இருக்கும்.
3. கசகசாவை தினமும் ஒரு ஸ்பூன் வீதம் சாப்பிட்டு வந்தால் உடல் பளபளப்பாக இருக்கும்.
4. முடி உதிராமலும், நன்கு வளரவும் தினமும் சோற்றுக் கற்றாழையில் உள்ள சோற்றை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, தினமும் ஒரு துண்டு வீதம் சாப்பிட்டு வந்தால், முடிக்கு மட்டுமல்ல உடலும் ஆரோக்கியம் பெறும்.
5. எலுமிச்சை சாற்றில் தேங்காய் எண்ணெய் கலந்து தேய்த்து வந்தால் முடி அழகான தோற்றம் பெறும்.
6. தேனில் மிளகு தூளை சேர்த்து தினமும் காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நினைவுத் திறன் பெருகும். ■

நஜீமா, காஞ்சிபுரம்.

மல்லிகைப் பூ

மல்லிகைப் பூக்கள் சிறிதளவினை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து, அதனை வடிகட்டி அருந்தி வந்தால் குடற்புழுக்கள் தானாக வெளியேறிவிடும். மல்லிகைப் பூக்களை நிழலில் நன்கு உலர்த்தி பொடி செய்து காலை மாலை தேநீர் அருந்துவது போல் தண்ணீரில் கலந்து அருந்தி வந்தால், சிறுநீரகக் கற்கள் காணாமல் போகும்.

சிறிது மல்லிகைப் பூக்களை எடுத்து தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டி அருந்தினாலே போதும் மாதவிலக்கு காலங்களில் ஏற்படும் சோர்வு நீங்கும், ■

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

கூடுதல் தலைமைச் செயலாளர் அலுவலகத்தில் கழிப்பறை மாதிரி வடிவம் காட்சிக்கு வைத்தல்

உறிஞ்சு குழி கழிப்பறைதான் கிராமப்புற இடங்களுக்கு உகந்தது. இந்த உண்மை எத்தனை பேருக்கு தெரியும்? உறிஞ்சு குழி கழிப்பறை உபயோகித்தால் குழி விரைவில் நிறைந்து விடும் என்ற தவறான புரிதல் மக்கள் மத்தியில் உள்ளது. இதை எவ்வாறு களைவது? களப் பணியாளர்களுக்கு இது உண்மையான சவால்தான். இதன் இன்னொரு பக்கமாக மேற்கண்ட கேள்விகள் குறித்து திட்டத்தை அமல்படுத்தும் அதிகாரிகள் மத்தியில் எவ்வளவு புரிதல் இருக்கிறது என்பதை ஆய்வதும் அவசியம்.

கழிப்பறை மாதிரி வடிவம் காட்சிக்கு அமைத்தல் மற்றும் உறிஞ்சுக் குழியில் இருந்து மக்கிய உரத்தை கையாளுதல் போன்றவற்றிற்கு முன் உதாரணமாக 11.12.2017 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நிகழ்வு ஒன்று நடைபெற்றது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் தங்கள் அலுவலகத்தில் உறிஞ்சுக் குழி கழிப்பறையின் மாதிரி வடிவத்தை காட்சிக்கு அமைத்தார்கள். பின் பெரம்பலூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள உறிஞ்சுக் குழியில் இருந்து எடுத்து வரப்பட்ட மக்கிய உரத்தை வெறும் கைகளால் நாம் எடுக்கலாம், அது உரமாக மாறியதால் அதனை மண் வளத்தை மேம்படுத்த உபயோகிக்கலாம் என்ற செய்தியானது இந்த நிகழ்வின் மூலம் வலுப்பெற்றுள்ளது.

இதுபோன்ற மாதிரி வடிவங்களை அனைத்து அலுவலகங்களிலும் வைப்பதின் மூலம் உறிஞ்சு குழி கழிப்பறையின் நன்மைகளை அனைவரும் அறியும் வண்ணம் இருக்கும் என்பது இன்னுமொரு முன்னேற்றம். இந்த நிகழ்வின்போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநகரத்தின் கூடுதல் இயக்குநர் திரு. கோ. லட்சுமிபதி அவர்கள் மற்றும் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர் அவர்களும் உடனிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநகரத்தின் இயக்குநர் திரு. கே. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்களும் தங்கள் அலுவலகத்தில் இரு உறிஞ்சுக் குழி கழிப்பறை மாதிரி வடிவத்தைக் காட்சிக்கு அமைத்தார்கள், பின்பு உறிஞ்சுக் குழியில் இருந்து எடுத்து வரப்பட்ட மக்கிய உரத்தை வெறும் கைகளால் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். ■

மத்திய அமைச்சரகத்தின் இணை செயலாளரின் தமிழ்நாடு வருகை

மத்திய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சரகத்தின் இணைச் செயலாளர் திரு. அருண்பரோக அவர்கள் தமிழ்நாடு வருகை தந்து, தூய்மை பாரத இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து மேற்பார்வை செய்தார். இந்தக் களப்பணியானது 14.12.2017 அன்று மேற்கொள்ளப்பட்டது. மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டாரத்தில் உள்ள சிருவாலை கிராம ஊராட்சி, கல்லிக்குடி வட்டாரத்தில் உள்ள புரயூர் மற்றும் அலங்காநல்லூர் வட்டாரத்தில் உள்ள அச்சம்பட்டி ஆகிய கிராம ஊராட்சிகளில் களப்பணியானது மேற்கொள்ளப்பட்டது.

இந்த சுகாதாரப் பணியின் போது மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. வீரராகவராவ், இ.ஆ.ப., அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநகரத்தின் கூடுதல் இயக்குநர் திரு. கோ. லட்சுமிபதி அவர்கள் மற்றும் மதுரை மாவட்டத்தின் கூடுதல் ஆட்சியர் ஆகியோர் உடனிருந்தனர்.

அச்சம்பட்டி கிராமத்தில் தங்கள் வீட்டில் கழிவறை கட்டி, அதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் 90 வயதான முதியோர் தம்பதிகளான திரு. அழகு அம்பலம் மற்றும் திருமதி. அங்கம்மாள் ஆகியோருடன் உரையாடல் மேற்கொண்டது இந்நிகழ்வின் முக்கிய அம்சமாகும்.

யூனிசெஃப் நட்சத்திர தூதுவரின் சுகாதார விழிப்புணர்வு

உறிஞ்சுக் குழி கழிவறை ஊரகப் பகுதிகளுக்கு உகந்த கழிவறை தொழில் நுட்பம். இதனை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று அவர்களுக்கு இந்த தொழில் நுட்பத்தினை குறித்த புரிதல் ஏற்படுத்துவதென்பது ஒரு சவாலாகவே உள்ளது. முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் இலக்கிற்காக உழைக்கும் சுகாதார ஊக்குநர்கள் மூலம் இது ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம் இலக்கினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல முன்னேற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக யூனிசெஃப் நிறுவனத்தின் நட்சத்திர தூதுவரான நடிகை திரிஷா அவர்கள் இரு உறிஞ்சுக்குழி தனிநபர் இல்லக் கழிவறை கட்டுமானம் மற்றும் அதன் பயன்பாடு குறித்து மக்களுக்கு அண்மையில் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

கடந்த டிசம்பர் 29ஆம் தேதியன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டாரத்தில் உள்ள வட நெம்மேலி என்ற கிராம ஊராட்சியில் இரு உறிஞ்சுக்குழி தனிநபர் இல்லக் கழிவறை ஒன்றைக் கட்டி, அதன் உபயோகம், நன்மைகள் போன்றவை குறித்து யூனிசெஃப் நட்சத்திர தூதுவரான திரிஷா அவர்கள் கிராம மக்களுடன் உரையாடல் மேற்கொண்டார்கள். மக்களுடன் உரையாடும் போது, “கழிவறை கட்டி உபயோகிப்பதன் மூலம் குழந்தைகள் நோய்களில் இருந்து பாதுகாப்பதுடன், அது உயிரைக் காப்பதாகவும் முக்கியமாக கழிப்பறை உபயோகம் பெண்களின் பாதுகாப்பாகவும் மரியாதையாகவும் இருக்கிறது” என்று மக்களுடன் உரையாடல் மேற்கொண்டார்.

இதன் மூலம் வட நெம்மேலி கிராம ஊராட்சி மக்களுக்கு கடந்த டிசம்பர் 29ஆம் நாள் என்பது தனிநபர் இல்லக் கழிவறை குறித்து விழிப்புணர்வு நாளாக இருந்தது.

யூனிசெஃப் நட்சத்திர தூதுவர் திரிஷா அவர்கள், இரு உறிஞ்சுக்குழி தனிநபர் இல்லக் கழிவறை கட்டுவதில் பங்கேற்றபின் கிராம மக்களுடன் உரையாற்றினார். இந்த நிகழ்வின் போது காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. ஜெயக் குமார் அவர்கள் மற்றும் யூனிசெஃப் நிறுவனத்தின் தலைமை மேலாளர் திரு. ஜாப் ஃஷக்காரிய அவர்கள், யூனிசெஃப் நிறுவனத்தின் தகவல் கல்வி தொடர்பின் நிபுணர் திரு. சுகாதாராய் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த சுகாதார களப் பணிக்கு பின் யூனிசெஃப் நட்சத்திர தூதுவர் திரிஷா அவர்கள் சென்னை தலைமைச் செயலகம் வருகை தந்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்தார். இந்த சந்திப்பில் சுகாதாரம் சார்ந்த பிற துறைகளான பொது சுகாதாரம், பள்ளிக் கல்வி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்ந்த துறைத் தலைவர்கள் பங்கேற்றனர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநகரத்தின் இயக்குநர் திரு. கே. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்களும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டு உரையாடினார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநகரத்தின் கூடுதல் இயக்குநர் திரு. கோ. இலட்சுமிபதி அவர்கள் இந்த சந்திப்பின்போது உடனிருந்தார்.

சுகாதாரம் குறித்த இந்த கலந்தாய்வின் போது, சுகாதாரம் சார்ந்த துறைகளில் இருந்து பங்கேற்ற அந்தந்தத் துறைத் தலைவர்கள் தங்கள் துறையின் சுகாதாரம் குறித்த நடவடிக்கைகளை யூனிசெஃப் நட்சத்திர தூதுவரான திரிஷா அவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

யூனிசெஃப் நட்சத்திர தூதுவரான திரிஷா அவர்களின் இந்த சுகாதார விழிப்புணர்வானது பெரும்பாலான ஊடகங்களில் பேசப்பட்டு வருகிறது. முக்கியமாக அவரது ட்விட்டர் (Twitter) பக்கத்தில் அறிவிக்கப்பட்ட இந்த நிகழ்வானது 6000க்கும் மேற்பட்டோர் பார்த்து விரும்பியதாக பதிவு செய்திருக்கின்றனர்.

யூனிசெஃப் நட்சத்திர தூதுவரின் சுகாதார விழிப்புணர்வு

சென்னை தலைமைச் செயலகத்தில் கலந்தாய்வுக் கூட்டம்

வட நெம்மேலி ஊராட்சி கிராம மக்கள்

யூனிசெஃப் நட்சத்திர தூதுவரின் சுகாதார விழிப்புணர்வு

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் இரு உறிஞ்சுக்குழி கழிப்பறை கட்டுமானம் குறித்து விளக்கம் அளித்தார்.

யூனிஸ்செப் நட்சத்திர தூதுவர் வட நெம்மேலியில் இரு உறிஞ்சுக்குழி கழிப்பறை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

கிராமங்களில் தூய்மை நாள் நிகழ்வு – 20.12.2017

ஒரு கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தி, அவைகளை உபயோகிப்பத மிக அவசியம். கிராமத்தின் ஒட்டு மொத்த சுகாதாரம் கழிவறை கட்டி அதனை உபயோகிப்பது மட்டும் ஆகாது. அதற்கும் மேலாக சுற்றுப்புறத்தைத் தூய்மையாகக் காப்பதும் ஆகும். குறிப்பாக திட மற்றும் திரவக் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் கையாள்வதே அடுத்த கட்ட முழு சுகாதார தமிழகத்திற்கான திறவுகோல் ஆகும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட கிராம ஊராட்சியை திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சியாக நாம் அறிவிக்கலாம்.

தமிழ்நாடு, திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்துவதில் நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது. மற்ற மாநிலங்களில் தனிநபர் இல்லக் கழிவறைகளைக் கட்டி முடித்த பின் திரவ மற்றும் திடக் கழிவு மேலாண்மைப் பணிகளைத் துவக்குவர். ஆனால் இந்தியாவிலே தமிழ்நாடு மட்டும்தான் திடக்கழிவு மேலாண்மைக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்து, தற்போது திறம்பட செயல்படுத்தி வருகிறது.

ஒட்டுமொத்த கிராமத்தின் சுகாதார நிலையே "முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்" என்ற சுகாதார முழக்கத்தின் குறிக்கோள் ஆகும். இதனை மேலும் வலுப்படுத்தி, கடந்த டிசம்பர் மாதம் 20ஆம் நாள் இந்தியக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சகம் "கிராமங்களில் தூய்மை நாள்" அனுசரிக்கக் கேட்டுக் கொண்டது. கிராமங்களின் தூய்மை தர நிலை மதிப்பீடு (Village Swachhata Index) செய்வதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடத்தி, கிராமங்களின் தூய்மை தர நிலை மதிப்பீடு நிர்ணயிக்க வேண்டும் என்றும், தூய்மை தர நிலை மதிப்பீடு மற்றும் சான்றிதழ் ஆகியவற்றின் விவரங்களை இணையதளத்தில் ஒவ்வொரு கிராம ஊராட்சியாக பதிவேற்றம் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் கடந்த டிசம்பர் மாதம் 20ஆம் தேதி மாவட்டங்களில் நடைபெற்ற "கிராம தூய்மை நாள் நிகழ்வு" பின்வருமாறு.

அரியலூர்

கடலூர்

தர்மபுரி

கிராமங்களில் தூய்மை நாள் நிகழ்வு – 20.12.2017

திண்டுக்கல்

ஈரோடு

காஞ்சிபுரம்

கரூர்

கிருஷ்ணகிரி

மதுரை

நாகப்பட்டினம்

கிராமங்களில் தூய்மை நாள் நிகழ்வு – 20.12.2017

பெரம்பலூர்

புதுக்கோட்டை

தஞ்சாவூர்

திருநெல்வேலி

திருப்பூர்

திருவள்ளூர்

திருவண்ணாமலை

கிராமங்களில் தூய்மை நாள் நிகழ்வு – 20.12.2017

வேலூர்

விழுப்புரம்

விருதுநகர்

தொற்றா நோய்கள் கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு திட்டம்

பெரம்பலூர் மாவட்ட சுகாதாரத் துறை மற்றும் மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து தொற்றா நோய்கள் கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்த, மகளிர் சுய உதவிக் குழு பயிற்றுநர்களில் தேர்வு செய்யப்பட்ட 90 சுகாதார களப் பணியாளர்களுக்கு (மகளிர் சுகாதார ஆர்வலர்கள்) பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்களால் சீருடை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் சுகாதாரப் பணியாளர்களுடையே பேசும் போது, 'களப் பணியாளர்கள் தங்களது துணை சுகாதார நிலையத் திற்கு உட்பட்ட கிராமங்களில் குடும்ப வாரியாக சென்று தொற்றா நோய்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் தொற்றா நோய்களைக் கண்டறியும் உபகரணங்களைக் கொண்டு இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் உள்ளதா? என்பதைக் கண்டறிந்து, அவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தொடர் பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு பரிந்துரை செய்ய வேண்டும். கிராமங்களில் பொது இடங்களில் மலம் கழித்தலைத் தவிர்க்கவும், குழந்தைத் திருமணம் செய்வதனாலும், இளம் வயதில் பிரசவிப்பதனாலும் ஏற்படும் இடர்பாடுகள் பற்றியும் களப் பணியாளர்களுக்கு கிராம மக்களுக்கு தெளிவாக எடுத்துரைக்க வேண்டுமென' குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. எஸ். உமாமகேஸ்வரி அவர்கள், சுகாதாரத்துறை துணை இயக்குனர் மருத்துவர் சம்பத் அவர்கள், தொற்றா நோய்கள் திட்ட ஒருங்கிணைப்பாளர் மருத்துவர். விவேகானந்தன், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் திருமதி. எஸ். துர்கா செல்வி, திருமதி. எஸ். மணிமேகலை ஆகியோர் கலந்து கொண்டனர். ■

களப் பணியாளர்களுக்கான கலந்தாய்வுப் பயிற்சி

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் வட்டாரங்களில் பணியாற்றும் அனைத்து களப்பகுதி வழி நடத்துனர்களுக்கான திட்டம் குறித்த பல்வகை செயல்பாடுகள் குறித்த பயிற்சி 20.12.2017 அன்று நடத்தப்பட்டது.

இப்பயிற்சியினை திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள் துவக்கி வைத்து பயிற்சி குறித்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் களப் பகுதி வழிநடத்துனர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர், ■

சிறப்பு வாழ்வாதார பயிற்சி

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் தின் கீழ் செயல்படுத்தப்படும் முதற்கட்ட வட்டாரமான ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் ஆண்டு செயல் திட்டத்தின் கீழ் சிறப்பு வாழ்வாதாரத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை குறித்து சமுதாய வள பயிற்றுநர்களுக்கான பயிற்சி 03.01.2018 முதல் 06.01.2018 வரை நடைபெற்றது. இப்பயிற்சியினை திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் களப் பகுதி வழிநடத்துனர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கள ஆய்வு

திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை 13.12.2017 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் பொங்கலூர் வட்டாரத்தில் உள்ள பெருந்தொழுவு ஊராட்சியில் உள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களிடம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டப் பணிகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல் பாடுகளைப் பார்வையிட்டு, அதன் உறுப்பினர்களிடம் பல்வேறு விபரங்களைக் கேட்டறிந்தார்.

பின்னர் தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சியில் செயல்படும் மூங்கில் கூடை தயாரிக்கும் ஒத்தத் தொழில் குழுவின் செயல்பாடுகள் மற்றும் கால் மிதியடிகள் உற்பத்தி செய்யும் வள்ளல் எம். ஜி. ஆர். மகளிர் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களும் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களும் உடனிருந்தனர். ■

வளப் பயிற்றுனர்களுக்கு பயிற்சி

நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் வட்டாரத்தில் 2016-2017 சிறப்பு வாழ்வாதாரத் (AAP) திட்டத்தின் கீழையூரைச் சேர்ந்த 22 ஊராட்சிகளில் உள்ள 44 வளப் பயிற்றுனர்களுக்கு, கீழையூர் சமுதாயக் கூடத்தில் 03.01.2018 முதல் 06.01.2018 வரை பண்ணை சார்ந்த தொழில்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சி, சிக்கல் வேளாண்மை அறிவியல் மைய வல்லுனர்கள் மற்றும் கால் நடைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களைக் கொண்டு அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியினை நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. மதுமதி அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்வின் போது உதவித் திட்ட அலுவலர் திரு. செல்வகணபதி, கீழையூர் களப் பகுதி வழிநடத்துனர் ஆகியோர் உடனிருந்தனர். ■

வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், பொட்டிரெட்டிப்பட்டி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாம் 06.01.2018 அன்று நடைபெற்றது.

நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர். இரா. மணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில், பணி வாய்ப்பு வேண்டி 340 இளையோரும், வேலைவாய்ப்பு தரும் 16 தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டனர். பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்ற 100க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை திட்ட இயக்குநர் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் திரு. பாலசுந்தரம், திரு. சாகுல் ஹமீது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. சீனிவாசன், திரு. பிரபாகரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பள்ளி தலைமையாசிரியர் திருமதி. சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர். ■

மாடித் தோட்டம் அமைப்பதற்கான பயிற்சி மற்றும் மாதிரி மாடித் தோட்டம் திறப்பு

தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் ஆர்செட்டி மூலம் நகர்ப்புறங்களில் வசிக்கின்ற பெண்கள் தங்களுக்குத் தேவையான காய்கறிகளை தங்கள் இல்லங்களில் உற்பத்தி செய்திட ஏதுவாக மாடித் தோட்டம் அமைப்பதற்கான பயிற்றுனர்களை உருவாக்கும் பயிற்சி, தூத்துக்குடி பாரத மாநில வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் மூலம் தொடங்கியது.

இதன் தொடக்க விழா கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரியில் தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு. பிரசாத், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே.ரேவதி அவர்கள், வேளாண்மை கல்லூரி முதல்வர் திரு. ஏ. ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். SBI ஆர்செட்டி இயக்குநர் திரு. எம். மு. துரைசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. முத்து எழில் ஆகியோர் திட்ட விளக்கவுரையாற்றினர். முன்னதாக உதவித் திட்ட அலுவலர் திரு. சி. எம். சிவக்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.

10 நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியானது முதல் 6 நாட்கள் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரியிலும், 4 நாட்கள் தூத்துக்குடி ஆர்செட்டியிலும் நடைபெற்றது. இப்பயிற்சியில் மாடித் தோட்டம் அமைத்தல் காளான் வளர்ப்பு, மண்புழு வளர்ப்பு, பனை வளர்ப்பு மற்றும் பஞ்சகவ்யம் தயாரித்தல் பயிற்சி உள்ளிட்டவை களும் கற்றுத் தரப்பட்டன.

பயிற்சியின் போதே மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகத்தில் மாதிரித் தோட்டம் அமைக்கப்பட்டது. இம்மாதிரித் தோட்டத்தை பொதுமக்கள் பார்வையிடவும், தோட்டம் அமைப்பது குறித்த விளக்கங்கள் பெறவும், வசதி செய்யப்பட்டிருந்தது.

மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த மாதிரி மாடித் தோட்டத்தின் திறப்பு விழா 10.01.2018 அன்று தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மாநகராட்சி ஆணையர் டாக்டர். ஆல்பிஜான் வர்க்கீஸ் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, மாதிரி மாடித் தோட்டத்தை திறந்து வைத்து பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

மாநகராட்சி செயற்பொறியாளர் திரு. ரூபன் சுரேஷ் பொன்னையா அவர்கள், மேற்கு மண்டல உதவி ஆணையர் திரு. சரவணன் அவர்கள், சுகாதார அலுவலர் திரு. ஸ்டாலின் பாக்கியநாதன் அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் திருமதி. பிரேமா, திரு. சிவக்குமார், ஆர்செட்டி இயக்குநர் திரு. துரைசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முன்னதாக தூத்துக்குடி வடக்கு தெற்கு மண்டல மாடித் தோட்ட பயிற்றுனர் திருமதி. தனம் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். விழாவின் நிறைவில் கிழக்கு மண்டல மாடித் தோட்ட பயிற்றுநர் திருமதி. ராசாத்தி நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது. ■

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/-
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/-
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/-

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/-
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் மாத இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு 2017 டிசம்பர் மாதம் முடிய நிர்ணயித்த இலக்கை எய்தி முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாவட்டங்கள்

1) **தூத்துக்குடி மாவட்டம்**
2) **நாகப்பட்டினம் மாவட்டம்**
3) **தஞ்சாவூர் மாவட்டம்**
4) **திருநெல்வேலி மாவட்டம்**
5) **திருச்சிராப்பள்ளி மாவட்டம்**

இந்த மாவட்டங்களுக்கு முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவித் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஒத்தத் தொழில் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். ■

– ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்.

மூங்கில் கூடை பின்னும் ஒத்தத் தொழில் குழுவின் வெற்றிக் கதை

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் வட்டாரம், தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சியில் மிகவும் வறுமை நிலையில் உள்ள 21 குடும்பங்களைச் சார்ந்த 12 பெண்கள் இணைந்து ஸ்ரீ ஐயப்பா மகளிர் சுய உதவிக் குழுவினை துவக்கி, மகளிர் திட்டத்தின் மூலம் அடிப்படை பயிற்சிகள் பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

இந்த சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மூங்கில் கூடை பின்னுவதில் திறமை வாய்ந்தவர்களாக இருந்தமையால், வங்கியின் மூலம் ரூ. 3 இலட்சம் கடன் பெற்று தங்களது தொழிலை ஊக்கத்துடன் மேற்கொண்டு வருகின்றனர். இக்குழுவினர் பின்னும் வயர்களுடன் கூடிய மூங்கில் கூடைகளுக்கு திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் மாவட்டத்தில் நல்ல வரவேற்பு உள்ளது.

ஸ்ரீ ஐயப்பா சுய உதவிக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள 12 பெண்களுடன், அந்த கிராமத்தில் உள்ள 21 குடும்ப உறுப்பினர்களும் இத்தொழிலில் ஈடுபட்டு நல்ல இலாபம் ஈட்டி வருகின்றனர். மூங்கில் கூடைகள் பின்னுவதற்கான மூலப் பொருட்களாகிய மூங்கில் கோயமுத்தூரிலும், வயர்கள் பெங்களூரிலும் வாங்குவதற்கு பொருளாதார வசதி இல்லாததால் அவ்வப்போது தொழிலில் மந்த நிலை ஏற்பட்டது. எனவே இந்த ஊராட்சியில் உள்ள 21 குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை இணைத்து, மூங்கில் கூடை பின்னும் ஒத்தத் தொழில் குழுவினை உருவாக்கி, தர மதிப்பீடு செய்து, ஊக்கத் தொகையாக ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டது. இத்தொகையினைப் பயன்படுத்தி தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து, தற்போது சிறப்பாக தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தொழில் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு நாளைக்கு 9 முதல் 10 கூடைகள் வரை தயாரித்து, திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் பகுதிகளில் விற்பனை செய்வதுடன், மகளிர் திட்டம் சார்பில் நடைபெறும் கண்காட்சிகள், கல்லூரிச் சந்தைகள் போன்றவற்றிலும் தங்களின் மூங்கில் கூடைகளை விற்பனை செய்து மாதந்தோறும் கணிசமான அளவில் வருவாய் ஈட்டி வருகின்றனர்.

இந்த ஒத்தத் தொழில் குழுவின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. ஜா. சம்பத் அவர்கள் நேரில் பார்வையிட்டு, அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரம், மூலப்பொருட்கள், விற்பனை விபரம் போன்ற விபரங்களை கேட்டறிந்ததுடன், மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். இந்த நிகழ்வின் போது திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர். ■

லூபி பியூட்டி பார்லர்

வேலூர் மாவட்டம், ஏலகிரி மலைப்பகுதியில் உள்ள சிறு கிராமமான அத்தனாவூரில் வசிக்கும் திருமதி. நாசி, மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக பல்வேறு தொழிற் பயிற்சிகள் வழங்கப்படும் விபரத்தை, தன் தோழியின் வாயிலாக அறிந்த இவர், அழகுக் கலை பயிற்சிக்கு விண்ணப்பித்தார். இவரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இவருக்கு இந்தியன் வங்கி சுய தொழில் பயிற்சி நிறுவனத்தில் (INDSETI) 30 நாட்கள் அழகுக் கலை மேலாண்மை பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சியை நிறைவு செய்த திருமதி. நாசி தன்னுடைய கிராமத்தில் சொந்தமாக அழகு நிலையம் ஆரம்பிக்க விரும்பி, அதற்குத் தேவையான மூலதனத்திற்காக ஏலகிரி கிளை இந்தியன் வங்கியில் கடன் வேண்டி விண்ணப்பித்தார். INDSETI நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி இவருக்கு மானியத்துடன் கூடிய கடனாக ரூ. 3 இலட்சம் வழங்கப்பட்டது. இத்தொகையினை மூலதனமாகக் கொண்டு, திருமதி. நாசி, 'லூபி பியூட்டி பார்லர்' என்ற அழகு நிலையத்தை துவக்கினார். தற்போது இந்த அழகு நிலையத்தின் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 15 ஆயிரம் வரை வருவாய் கிடைக்கிறது. தன்னை சுய தொழில் முனைவோராக்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், INDSETI நிறுவனம் மற்றும் ஏலகிரி கிளை இந்தியன் வங்கி ஆகியவற்றிற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்

திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிறுவனக் குழுவினர் தமிழகம் வருகை

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும், திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த ஆலோசனைகள் வழங்கிடவும் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிறுவனக் குழுவினர் கடந்த 18.12.2017 முதல் 22.12.2017 வரை தமிழகத்திற்கு வருகை புரிந்தனர்.

அவர்கள் நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குச் சென்று கள ஆய்வு செய்தனர். அதில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் திட்டப் பணியாளர்கள், கூட்டு வள மைய பணியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்திய பின், மா கூழ் தயாரித்தல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட மீனவர் சங்க கூட்டமைப்பு போன்றவற்றைப் பார்வையிட்டு கள ஆய்வு செய்தனர். அதனைத் தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்பாசி சேகரிக்கும் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், சின்ன ஏர்வாடி மீன் விற்பனைச் சங்கம், NABFINS களப் பணியாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஆகியோருடன் கலந்தாய்வு நடத்திய பின் திட்ட இயக்குநரிடம் அறிக்கை சமர்ப்பித்தனர்.

அறிக்கையில் சரியான பாதையில் திட்டம் செயல்பட்டு வருவதாகவும், மேலும் புதியதாக திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் திருவாரூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் திட்டம் இன்னும் விரைவாக செயல்படுத்தப்பட வேண்டும் எனவும், மீன் விற்பனை சங்கம் அமைத்தல், பண்ணை மற்றும் பண்ணை சாரா தொழில்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றை விரைந்து செயல்படுத்தவும் ஆலோசனைகளை வழங்கினர். ■

சமுதாய பட்டறிவுப் பயணம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படும் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தாமரைக்குளம், புதுமடம், பனைக்குளம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் ஆர். எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் நிர்வாகிகள் என மொத்தம் 56 நபர்கள் 27.11.2017 அன்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பட்டறிவு பயணம் மேற்கொண்டனர்.

அம்மாவட்டத்திலுள்ள, இராஜக்கா மங்கலம் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் செயல்பாடுகள், பதிவேடுகள் பராமரித்தல், கூட்டமைப்பு மூலம் செய்யப்படும் தொழில்கள் குறித்து பார்வையிடப்பட்டது. அதில் பொதுக் கணக்கு, துயர் துடைப்புக் கணக்கு, சமையல் எரிவாயு கலன் அமைத்தல் கணக்கு, வீட்டு மாடித் தோட்டம் அமைத்தல் கணக்கு, கூட்டுப் பொறுப்புக் குழு கணக்கு, NRF கடன் குறுக்கு தொழில் கடன், ஊக்க நிதிக் கடன் மற்றும் இதரத் திட்டக் கணக்குகள் பார்வையிடப்பட்டது. மேலும் கூட்டுப் பொறுப்புக் குழு மூலம் முறுக்கு மற்றும் அதிரசம் போன்ற இனிப்புப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதை தள ஆய்வு செய்தனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வணிக மேம்பாட்டு முகவராக (BDC) செயல்பட்டு, வங்கியில் மொத்தம் 130 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் பெற்று அதன் வழி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருவதைக் கண்டறிந்தனர். மேலும், இந்த சமுதாயப் பட்டறிவுப் பயணத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு இதுபோன்று சிறப்பாக செயல்பட உறுதி ஏற்றுக் கொண்டனர். ■

மருத்துவ குணங்கள் நிறைந்த வெந்தயம்

வெந்தயக் கீரை, வெந்தை, மேதி என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் வெந்தயம் சிறு செடி வகையைச் சேர்ந்தது. உணவு மற்றும் மருத்துவ உபயோகங்களுக்கு மிகவும் பயன்படும் வெந்தயம் கசப்புச் சுவையும், குளிர்ச்சித் தன்மையும் கொண்டது. காய்ச்சல், சீதக் கழிச்சல், உடல் எரிச்சல், இளைப்பு நோய் போன்றவற்றை குணமாக்கும். வெந்தயத்தைத் தூள் செய்து வைத்துக் கொண்டு 10 நாட்கள் காலை மாலை வேளைகளில் வெந்நீருடன் உட்கொள்ள வெள்ளைப்படுதல் குணமாகும். 5 கிராம் வெந்தயத்தை நன்கு வேகவைத்து, ஒரு தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிட்டு வர தாய்ப்பால் பெருகும். 10 கிராம் வெந்தயத்தை நெய்யில் வறுத்து 1/2 தேக்கரண்டி அளவு பெருஞ்சீரகம், சிறிது உப்பு சேர்த்து அரைத்து மோரில் கலந்து சாப்பிட வயிற்றுப் போக்கு கட்டுப்படும். வெந்தயத்தை ஊற வைத்து, அரைத்து, பசையாக்கி, தலையில் தேய்த்து, ஒரு மணி நேரம் ஊற வைத்து, பின்னர் இளஞ்சூடான நீரில் தலைக்கு குளித்து வந்தால், தலைமுடி கருத்து வளரும். வெந்தயத்தை அரைத்து தீப்பட்ட இடங்களில் தடவ தீப்புண் எரிச்சல் தணிந்து ஆறும். வெந்தயத்தை பொன் வறுவலாக வறுத்து, பொடித்து, சலித்து தினமும் காலை மாலை ஒரு டீஸ்பூன் வீதம் வாயில் போட்டு தண்ணீர் குடித்து வர நீரிழிவு நோய் கட்டுப்படும். ■

தொகுப்பு – திருமதி. ஜெயந்தி கண்ணன், எம்,ஏ., எம்.எட்.,
முதுகலைப் பட்டதாரி ஆசிரியை,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, திருவஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

காப்பீட்டு திட்டத்தின் மூலம் பயன் பெற்ற பயனாளி தன் அனுபவத்தை கூறுகிறார்.

என் பெயர் அன்பரசி, க/பெ. ராமமூர்த்தி. நான் கடலூர் மாவட்டம், வாண்டையாம்பள்ளம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் தனி நபர் விபத்து காப்பீட்டில் எனக்கும், என் கணவருக்கும் பிரீமியமாக ரூ. 50/– செலுத்தி காப்பீட்டில் இணைந்திருந்தேன்.

என் கணவர் கடந்த 04.01.2018 அன்று படகில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற போது விபத்துக்குள்ளாகி இறந்து விட்டார். அதனைத் தொடர்ந்து எனக்கு இழப்பீடுத் தொகை ரூ. 5 இலட்சம் UIIC காப்பீட்டு நிறுவனத்தாரால் வழங்கப்பட்டது.

மேலும், இந்த இழப்பீடு தொகை சரியான தருணத்தில் எனக்குக் கிடைத்ததால் எனக்கும் என் குடும்பத்திற்கும் பெரும் உதவியாக இருந்தது.

மேலும் நான் இந்தத் திட்டத்தில் காப்பீடு செய்யாமல் இருந்திருந்தால் என் கணவரை இழந்த பின் என்னுடைய வாழ்வாதாரம் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் தனி நபர் விபத்து காப்பீட்டை அறிமுகப்படுத்தி விழிப்புணர்வு பயிற்சி வழங்கி, மிகக் குறைந்த பிரீமியம் செலுத்தி அதிகப் பயன் பெறச் செய்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும், காப்பீட்டு நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ■

– திருமதி. அன்பரசி,
வாண்டையாம்பள்ளம் ஊராட்சி,
கடலூர் மாவட்டம்

கூட்டுப் பொறுப்புக் குழு மூலம் சிறுதொழில் தொடங்கி வருமானம் ஈட்டிய வெற்றிக் கதை

திருவள்ளூர் மாவட்டத்தில், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் சிறுளப்பள்ளம் ஊராட்சியில் வசிக்கும் ஐந்து பெண்கள் ஒன்றிணைந்து 2016–17ஆம் நிதியாண்டில் கூட்டுப் பொறுப்புக் குழு திட்டத் தின் வாயிலாக பல்லவன் கிராம வங்கியின் மூலம் ரூ. 1,90,000/– கடன் பெற்றனர். இக்கடனுதவியை மூலதனமாகக் கொண்டு அந்தப் பெண்கள் அப்பகுதியில் பேன்சி ஸ்டோர் ஒன்றைத் துவக்கி, அதில் பள்ளி மாணவ மாணவியருக்குத் தேவையான பொருட்களை விற்பனை செய்யத் துவங்கினர்.

இந்த பேன்சி ஸ்டோர் இங்கு வந்ததில் இருந்து இப்பகுதியைச் சேர்ந்த 1200க்கும் அதிகமான மாணவ – மாணவியர் தொலைதூரம் சென்று தங்களுக்குத் தேவை யான பொருட்களை வாங்கும் சிரமத்திலிருந்து மீண்டுள்ளனர். இந்தப் பயனாளிகள் தங்கள் தொழிலில் இருந்து பெறும் வருவாயைக் கொண்டு மாதந்தோறும் கடன் திருப்பம் செய்வதுடன், மாதந்தோறும் கணிசமான அளவு வருவாயும் பெற்று வருகின்றனர். தற்போது தாங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதாக இப்பெண்கள் கூறுகின்றனர். ■

செயற்கைப் பவளப் பாறைகள் கடலில் நிறுவுதல்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மேலாண்மை அலகின் மூலம் ரூ. 26.20 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்ட கடல் பகுதியில் செயற்கைப் பவளப் பாறைகளை நிறுவுவதற்கு 2017-18ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோவளம் மற்றும் பள்ளம் ஆழ்கடல் பகுதியில் Reef Fish Module, Well Ring Module, Grouper Fish Module என்ற மூன்று விதமான 450 செயற்கைப் பவளப் பாறைகள் சின்ன முட்டம் துறைமுகப் பகுதியில் உருவாக்கப்பட்டு, இந்திய அரசின் மத்திய கடல்சார் மற்றும் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் (CMFRI) மேற்பார்வையில் கடலுக்குள் நிறுவப்பட்டது.

செயற்கை பவளப் பாறையின் பயன்கள்

இந்த செயற்கைப் பவளப் பாறைகளில் ஒரு மாதத்திற்குள் கடற்பாசிகள் வளரத் துவங்கும். இந்த பாசிகளுக்கு இடையில் சிறு சிறு ஒட்டுண்ணிகள் உருவாகும். இவற்றை உண்ண வரும் மீன்கள் இந்த செயற்கைப் பவளப் பாறைகளின் இடுக்குகளில் முட்டையிட்டு இனப்பெருக்கத்தை மேற்கொள்ளும்.

பெரிய மீன்களின் தாக்குதலில் இருந்து சிறிய மீன்கள் தப்பிக்கவும் இந்த செயற்கைப் பவளப் பாறைகள் பயன்படும். இதையடுத்து 3 மாதங்களில் இப்பகுதியில் மீன்களின் இனப்பெருக்கம் மற்றும் எண்ணிக்கை பெருக வாய்ப்புள்ளதால், கோவளம் மற்றும் பள்ளம் பகுதியிலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ■

நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை குறித்துப் பயிற்சி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் பகுதி இரண்டு மாவட்டங்களான திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் அலுவலக நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், புத்தப் பராமரிப்பாளர்கள் மற்றும் குடியிருப்பு மன்ற நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை குறித்த பயிற்சி மதுரை YMCA மற்றும் திருச்சி சமூக சேவை சங்கம் ஆகிய இரண்டு பயிற்சி மையங்களில் தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) மூலம் பயிற்சி கடந்த 18.12.2017 முதல் 22.12.2017 வரை நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் சுமார் 65 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இப்பயிற்சி புதியதாக சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் தொடங்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு களுக்கு சிறப்பான பயிற்சி அளித்து அவர்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்கு ஏதுவாக அமையும். ■

சமுதாய உட்கட்டமைப்பு பணிகள்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் பகுதி இரண்டு திட்டப் பகுதி களான திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் சமுதாய உட்கட்டமைப்புப் பணிகளுக்கு ரூ. 1739.75 இலட்சம் ஒதுக்கீடு செய்து, அதற்கான பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதில் மக்கள் பங்கேற்புடன் கூடிய ஆய்வு முறையின் அடிப்படையில், மேம்பாட்டிற்குத் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான மீன் வலை பின்னும் கூடம், மீன் உலர் களம், குடிநீர் வசதி, அத்தியாவசிய இணைப்புச் சாலை மற்றும் வாழ்வாதாரத்திற்கு நேரடியான தொடர்புடைய இதர பணிகளை பயனாளிகளே கண்டறிந்து முன்னுரிமை அடிப்படையில் நுண் திட்டம் தயாரிக்கப்பட்டு செயல் படுத்தப்படுகிறது.

அவ்வாறு தயாரிக்கப்படும் இந்த நுண் திட்டங்களை திட்ட மேலாண்மை அலகின்ள மூலம் பரிசீலிக்கப்பட்டு, உட்கட்டமைப்புப் பணிகள் தொடங்குவதற்கு ஒப்புதல் வழங்கி, மாவட்ட செயலாக்க அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சிக்கும் அந்த ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை, மொத்த மீனவர்களின் எண்ணிக்கை, தாழ்த்தப்பட்ட மக்கள் எண்ணிக்கை ஆகிய காரணிகளின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது. ■

கடற்பாசி சேகரிக்கும் மீனவ மகளிருக்கான கடன் மீட்புத் திட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 3000க்கும் அதிகமான மீனவ பெண்கள் கடற்பாசி சேகரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பெரும் வியாபாரிகள் மற்றும் இடைத்தரகர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் பெற்று, அதனை திரும்பச் செலுத்த முடியாமல் அவர்களின் பிடியில் சிக்கி வாழ்வாதாரம் பாதித்த நிலையில் உள்ளனர். இடைத்தரகர்களின் பிடியில் இருந்து விடுவிக்கும் பொருட்டு கடற்பாசி சேகரிப்போருக்கான கடன் மீட்புத் திட்டம் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கடற்பாசி சேகரிக்கும் மீனவப் பெண்களை கூட்டுப் பொறுப்புக் குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கு நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 10,000/– கடன் மீட்பு நிதியாக வழங்கப்பட்டு பெரும் வியாபாரிகள் மற்றும் இடைத் தரகர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். இதன் மூலம் அவர்கள் சேகரிக்கும் கடற்பாசிக்கு நல்ல விலை பெற முடிகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 84 கூட்டுப் பொறுப்புக் குழுக்களை சார்ந்த 420 உறுப்பினர்களுக்கு ரூ. 42 இலட்சம் கடன் மீட்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. ■

மீன் விற்பனைச் சங்கங்கள்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் திருவாரூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 2000 சிறு குறு / நாட்டுப் படகு மீனவர்களை ஒருங்கிணைத்து 50 மீன் விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 297 மீனவர்களை ஒருங்கிணைத்து ஆறு மீன் விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மீன் விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ. 82.35 இலட்சம் கடன் மீட்பு நிதி வழங்கப்பட்டு, 287 மீனவர்களும், வியாபாரிகள் மற்றும் இடைத் தரகர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இதனால் மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை தாங்களே விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. ■

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079.
Published from (66,000 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN.

மாநில அளவிலான கிராமப்புற சுய வேலைவாய்ப்பு நிறுவன குழுவின் முதலாவது கூட்டம்

மாநில அளவிலான கிராமப்புற சுய வேலைவாய்ப்பு நிறுவன குழுவின் முதலாவது கூட்டம், சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கில் 05.01.2018 அன்று நடைபெற்றது.

கூடுதல் தலைமைச் செயலர் / ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், நிர்வாக இயக்குநர் திருமதி. எஸ். அமிர்தஜோதி, இ.ஆ.ப., அவர்கள், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் மற்றும் தமிழ்நாடு மாநில அளவிலான வங்கியாளர்களின் கூட்டமைப்பின் நடத்துநர் திரு. சாரங்கி அவர்கள் முன்னிலை வகித்தனர். திரு. அனில் சுப்பிரமணியம் (இயக்குநர், தொழில் துறை, மத்திய ஊரகத் துறை, புதுதில்லி) அவர்கள், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் திட்ட இயக்குநர்கள், கிராமப்புற சுய வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இயக்குநர்கள், அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் திட்ட இயக்குநர்கள் பங்கு பெற்றனர்.

கிராமப்புற சுய வேலைவாய்ப்பு நிறுவனத்தின் செயல்பாடுகள் பற்றி இக்கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், பயிற்சி பெற்றவர்களுக்கு வங்கிக் கடனுடன் கூடிய சுய வேலை வாய்ப்புகள் குறித்தும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

கூட்டத்தின் நிறைவில் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் மாடியில் சுய உதவிக் குழுக்களின் மகளிரால் அமைக்கப்பட்டுள்ள மாடித் தோட்டத்தைப் பார்வையிட்டு, அங்கு விளைந்துள்ள கீரைகள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்ததுடன், தங்கள் பகுதியிலும் மாடித் தோட்டம் அமைப்பது குறித்த விபரங்களையும் கேட்டறிந்தனர்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 2nd Week of the every month

கழிவறை பழக்கம், உடல்வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சியின் அடையாளம்

மலம் வாய் வழி உள் சென்று நோய் பரவும் விதம்



தவிர்க்கும் வழிமுறைகள்

மலம் கழிக்க கழிப்பறையையே பயன்படுத்துதல்.

கைகளை சோப் உபயோகித்து சுத்தம் செய்தல்.



பாதுகாக்கப்பட்ட குடிநீரை முறையாக சேமித்து பயன்படுத்துதல்.



முறையாக உணவு சுத்தம் பேணுதல்.

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்! உடல் நலத்தை காத்திடுவோம்!